# தஞ்சாவூர் மாநகராட்சி

## மாமன்றக் கூட்ட தீர்மான நகல்

| Date of Meeting | Serial Number and subject in the Agenda (ORDINARY MEETING) | Decision of the City Corporation |
|---|---|---|
| 29.11.2023 | 432. தஞ்சாவூர் மாநகராட்சிக்கு சொந்தமான சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் புதிதாக கட்டப்பட்டுள்ள பழைய பேருந்து நிலையம் திருவையாறு பேருந்து நிலைய ATM மற்றும் உணவு விடுதிகளுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி, 11.08.2021–லும் சரபோஜி மார்க்கெட் சந்தை கடைகள் அய்யாசாமி வாண்டையார் அருகில் உள்ள வணிக வளாக கடைகள் ஏலம் 27.01.2022–லும் சரபோஜி மார்க்கெட் சந்தை கடைகள் அதன் அருகில் உள்ள வணிக வளாக கடைகள் பொது ஏலம் 14.03.2022–லும் மற்றும் மீன் மார்க்கெட்டிற்கு வந்து செல்லும், சைக்கிள் இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள், மீன்வெட்டும் கடைகள் பொது ஏலம் ஒப்பந்தப்புள்ளி 13.09.2023–லும் கோரப்பட்ட வகையில் விளம்பரம் செய்தமைக்கு விளம்பர நாளிதழ் இருந்து குறித்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.64,890/– கீழ்கண்டுள்ள KAL PUBLICATIONS (P) LTDதினசரி நாளிதழ் நிறுவனத்திற்க்கு வழங்கிட மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது |

| வ. எண் | இடம் | தினசரி நாளிதழின் பெயர் | பட்டியல் எண் | விளம்பர கட்டணம் ரூ. | சேவை வரி | கூடுதல் |
|---|---|---|---|---|---|---|
| 1 | சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் புதிதாக கட்டப்பட்டுள்ள பழைய பேருந்து நிலையம் உணவு விடுதி ATM கடைகளுக்கான பொது ஏலம் | தினகரன் நாளிதழ் 11.08.2021 | 3300288611 | 23040 | 1152 | 24192 |
| 2 | சரபோஜி மார்க்கெட் சந்தை கடைகள் அய்யாசாமி வாண்டையார் நினைவு பேருந்து நிலைய கடைகள் அதன் அருகில் உள்ள வணிக வளாக கடைகள் பொது ஏலம் | தினகரன் நாளிதழ் 27.01.2022 | 3300327654 | 15360 | 768 | 16128 |
| 3 | சரபோஜி மார்க்கெட் சந்தை கடைகள்அதன் அருகில் உள்ள வணிக வளாக கடைகள் பொது ஏலம் | தினகரன் நாளிதழ் 14.03.2022 | 3300334795 | 14400 | 720 | 15120 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | மீன் மார்க்கெட்டிற்கு வந்து செல்லும், சைக்கிள் இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள், மீன்வெட்டும் கடைகள் பொது ஏலம் | தினகரன் நாளிதழ் **13.09.2023** | 3300441169 | **9000** | **450** | **9450** | |
| | | கூடுதல் | | | | | **64890** | |

<u>அலுவலக குறிப்பு</u>

**1.** மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.**10849/2022**/எம்சிஏ**5)**

| | | |
|---|---|---|
| **29.11.2023** | 433. **தஞ்சாவூர் மாநகராட்சி 51 வார்டுகளிலும் திடக்கழிவு மேலாண்மை பணிகளை வெளிக்கொணர்வு முகமை (Outsourcing) மூலம் 181 வெளிக்கொணர்வு துரய்மை பணியாளர்களை கொண்டு** 03.01.2013 **முதல்** 14 **மாதங்கள் பணி மேற்கொண்ட வகையில் METC, Chennai நிறுவனம் செலுத்திய வைப்புத்தொகை ரூ.**1,15,000/- (Bill No.575173 **நாள்** 08.11.2013) **மற்றும் பட்டியல் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத்தொகை ரூ.**7,55,601/- **மொத்த கூடுதல் ரூ.**8,70,601/- **கோரி விண்ணபித்துள்ளரர்கள். மேற்படி தொகை** 2013-14 **நிதியாண்டில் உள்ளபடியால்** 11 **ஆண்டுகள் காலம் கடந்த நிலையில் தொகையினை மேற்படி நிறுவனத்திற்கு வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**<br><u>**அலுவலக குறிப்பு:-**</u><br>**மாமன்றம் அனுமதி வழங்கலாம்.** (ந.க.எண்.315/2011/பி3) | **அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது** |
| **29.11.2023** | 434. தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையாளர் குடியிருப்புக்கு ஆணையாளர் பெயரில் புதிதாக இன்டேன் இரட்டை உருளை எரிவாயு இணைப்பு M/s.சுந்தர விநாயகர் ஏஜென்சீஸ், தஞ்சாவூர் என்ற முகவரிடம் இருந்து பெறப்பட்டுள்ளது.<br>இதன்படி, புதிய இரட்டை எரிவாயு உருளை இணைப்புக்கான வைப்புத்தொகை, எரிவாயு உருளைக்கான தொகை மற்றும் இதர உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ள வகையில் ரூ.6930.00 தொகையினை M/s.சுந்தர விநாயகர் ஏஜென்சீஸ், தஞ்சாவூர் என்ற எரிவாயு முகவருக்கு வழங்கப்படும் விவரம் மாமன்றத்தின் பதிவிற்கும், தகவலுக்கும் வைக்கப்படுகிறது.<br><u>**அலுவலக குறிப்பு:-**</u><br>மாமன்றம் பதிவு செய்து அனுமதி வழங்கலாம். (ந.க.எண். 13981/2023/எம்சிஇ4) | பதிவு செய்து அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| 29.11.2023 | 435. இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 கும்பகோணம் மெயின் ரோடு பள்ளியாக்ரஹாரம் பகுதியில் ஏற்கனவே அமைந்துள்ள குடிநீர் பிரதான குழாய் பழுதடைந்துள்ளது. எனவே குடிநீர் பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் வழங்கும் பொருட்டு பழைய குடிநீர் பிரதான குழாயினை அகற்றிவிட்டு புதிதாக 150 MM Dia குடிநீர் பிரதான குழாய் அமைக்கும் பணிக்காக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.10,00,000/-க்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br>அலுவலக குறிப்பு:-<br>1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.10,00,000/-க்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2023-24ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. மேற்கண்ட பணிக்கு பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.12267/2023/எம்சிஇ5) | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது |
| 29.11.2023 | 436. தஞ்சாவூர் மாநகராட்சி மண்டலம் எண்-I வார்டு எண்.1 முதல் 13 வரையிலான பகுதிகளில் ஒரு சில பகுதிகளில் போதிய குடிநீர் வசதி கிடைக்கப்பெறாத காரணத்தினால் பொதுமக்களிடம் இருந்து புகார்கள் வந்தவண்ணம் உள்ளது. எனவே பொதுமக்களின் நலன்கருதி மற்றும் குடிநீர் பணியில் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு வார்டு எண்.1 முதல் 13 வரையிலான பகுதிகளில் விடுபட்ட இடங்களுக்கு குடிநீர் பிரதான குழாய் அமைக்கும் பணிக்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடுத்தொகை ரூ.16,90,000/-க்கு (ரூபாய் பதினாறு இலட்சத்தி தொன்னூறாயிரம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br>அலுவலக குறிப்பு:-<br>1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.16,90,000/-க்கு (ரூபாய் பதினாறு இலட்சத்தி தொன்னூறாயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2023-24ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| | 3. பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.14478/2023/எம்சிஇ5) | |
| 29.11.2023 | 437. தஞ்சாவூர் மாநகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் JCB 30+ 2 (M/C Sr No.3077588) வாகனம் 2000Hrsக்கு மேல் இயக்கப்பட்டுள்ளது. மேலும், வாகனத்தின் பக்கெட் பீக் தேய்ந்து விட்டது மற்றும் ஹட்ராலிக் பம்பும் பழுதடைந்து வாகனத்தை இயக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மேற்படி வாகனம் பொதுசுகாதார பிரிவு வாகனம் என்பதால், பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு வாகனம் கொள்முதல் செய்யப்பட்ட நிறுவனத்திலேயே பழுது மற்றும் சர்வீஸ் செய்வதற்கு M/S.JAYARAJ AUTO MOBILE AGENCY, THANJAVUR என்ற நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி பட்டியல் தொகையாக ரூ.25,963/- (ரூபாய் இருபத்தைந்தாயிரத்தி தொள்ளாயிரத்தி அறுபத்தி மூன்று மட்டும்) வரப்பெற்றுள்ளதை ஏற்று பணிகள் மேற்கொள்ளப்படும் விவரம் மாமன்றத்தின் தகவலுக்கு.<br><u>அலுவலக குறிப்பு:</u><br>1) இப்பணிக்கான விலைப்புள்ளித்தொகை ரூ.25,963/-ஐ (ரூபாய் இருபத்தைந்தாயிரத்தி தொள்ளாயிரத்தி அறுபத்தி மூன்று மட்டும்) ஏற்று பணிகள் மேற்கொள்ளப்படும் விவரத்தினை மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>2) இதற்கான செலவினத்தை 2023-24 வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) மேற்கண்ட நிறுவனத்திற்கு பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்கியதையும் மாமன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.11001/2023/எம்சிஇ5) | பதிவு செய்து அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது |
| 29.11.2023 | 438. தஞ்சாவூர் மாநகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் MINI HITTACHI 30+1 (M/C Sr No.3031465) வாகனம் 2000Hrsக்கு மேல் இயக்கப்பட்டுள்ளது. மேலும், வாகனத்தின் ஆயிலுக்கான ஓஸ் பழுதடைந்து வாகனத்தை இயக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் ஆயில் சர்வீஸ் மற்றும் இதர பழுதுகள் செய்ய வேண்டியுள்ளது. எனவே மேற்படி வாகனம் பொதுசுகாதார பிரிவு வாகனம் என்பதால், பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு வாகனம் கொள்முதல் செய்யப்பட்ட நிறுவனத்திலேயே பழுது மற்றும் சர்வீஸ் செய்வதற்கு M/S.JAYARAJ AUTO MOBILE AGENCY, THANJAVUR என்ற நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி பட்டியல் தொகையாக ரூ.18,008/- | பதிவு செய்து அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது |

(ரூபாய் பதினெட்டாயிரத்தி எட்டு மட்டும்) வரப்பெற்றுள்ளதை ஏற்று பணிகள் மேற்கொள்ளப்படும் விவரம் மாமன்றத்தின் தகவலுக்கு.

அலுவலக குறிப்பு:

1) இப்பணிக்கான விலைப்புள்ளித்தொகை ரூ.18,008/- (ரூபாய் பதினெட்டாயிரத்தி எட்டு மட்டும்) ஏற்று பணிகள் மேற்கொள்ளப்படும் விவரத்தினை மாமன்றம் பதிவு செய்யலாம்.

2) இதற்கான செலவினத்தை 2023-24 வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

3) மேற்கண்ட நிறுவனத்திற்கு பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்கியதையும் மாமன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.10545/2023/எம்சிஇ5)

---

**29.11.2023**

439. இம்மாநகராட்சிக்கு சொந்தமான வெண்ணாறு தலைமை நீரேற்று நிலையத்தில் நீரேற்றம் செய்யப்படும் குடிநீரை குளோரினேசன் செய்வதற்கு 900Kg Gas Cylinder தற்போது முடிவடைந்துள்ளதால், குடிநீர் பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு, பொதுமக்கள் நலன் கருதி குடிநீரை குளோரினேசன் செய்வதற்கு ஏதுவாக புதிதாக 6 எண்ணிக்கையிலான 900Kg Gas Cylinder வாங்கி வழங்கும் பணிக்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.1,36,000/-க்கு (ரூபாய் ஒரு இலட்சத்தி முப்பத்தாறாயிரம் மட்டும்) 18.08.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1. | M/S.GALAXY ENTERPRISES, DINDIGUL | 114000.00 | மதிப்பீட்டு தொகை 0.00% விகிதம் |
| 2. | திரு.S.கோபி, தஞ்சாவூர் | 150000.00 | மதிப்பீட்டு தொகையை விட (+) 31.58% அதிகம் |

அலுவலக குறிப்பை ஏற்க தீர்மானிக்கப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு</u>

1. மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியில் வரிசை எண்.1ல் கண்டுள்ள மதிப்பீட்டு தொகை விகிதத்தில் ரூ. 114000.00/- என்ற விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S.GALAXY ENTERPRISES, DINDIGUL என்ற ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணிக்கு வேலை உத்தரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.9959/2023/எம்சிஇ5)

**29.11.2023**

440. தஞ்சாவூர் மாநகராட்சிக்கு சொந்தமான OSR நிலங்கள் (Parks, Playfields & Open Spaces Reservation) ஆகியவைகளை அரசிதழில் பிரசுரிக்க வேண்டி நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டது. மேலும், மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற சட்டம் ஒழுங்கு கூட்ட நடவடிக்கையின் படி மேற்படி இனங்களை “**மாநகராட்சி ஆணையாளர்**” பெயரில் மாற்றம் செய்து கொள்ள தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது.

எனவே, “**மாநகராட்சி ஆணையாளர்**” பெயரில் உட்பிரிவு மாற்றம் செய்வதற்கும் மற்றும் கணினியில் உள்ளீடு செய்வதற்கும் கீழ்கண்டவாறு கட்டணங்கள் தஞ்சாவூர் வட்டாட்சியர் அலுவலகம் சேவை மையத்தில் செலுத்துவதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

| வ. எண். | தலைப்பு | உட்பிரிவு தொகை ரூ. | கணினியில் உள்ளீடு செய்வதற்கு ரூ. | எண்ணிக்கை | உட்பிரிவு தொகை மொத்தம் ரூ. | கணினியில் உள்ளீடு செய்வதற்கு தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | Parks | 400 | 60 | 145 | 58,000 | 8,700 |
| 2 | Playfields | 400 | 60 | 18 | 7,200 | 1,080 |
| 3 | Open Spaces | 400 | 60 | 14 | 5,600 | 840 |
| **கூடுதல்** | | | | | 70,800 | 10,620 |

எனவே, மேற்படி Parks, Playfields & Open Spaces Reservation ஆகியவைகள் அனைத்தும் உட்பிரிவு மற்றும் கணினியில் உள்ளீடு செய்வதற்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ. 81,420/- மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது

| | | |
|---|---|---|
| | அலுவலக குறிப்பு<br>மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 11623/2013/எப்1) | |
| 29.11.2023 | 441. தஞ்சாவூர் மாநகரம், தஞ்சாவூர் நகரம், வார்டு எண். 2, பிளாக் எண். 129, நகரளவு எண். 3866/2A,3,7, 6873.80 ச.மீ பரப்பளவு கொண்ட குடியிருப்பு மனை பிரிவுகளாக பிரித்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தஞ்சாவூர் அவர்களால் திரு. A. நாகராஜன் என்பவருக்கு மனைப்பிரிவு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மனை பிரிவு வரைபடத்திற்கு ம.வ/த.உ.தி.கு எண். SWP/37/2023, திட்ட அனுமதி எண். 65/2023 என எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதி கடிதம் Roc.No.M6EDP8CU(11112)/TD3/2023/TCP, நாள். 25.09.2023-ல் வரப்பெற்றுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் சாலை வசதி, மின்சார வசதி மற்றும் மழைநீர் வடிகால் வசதி நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளது என செயற்பொறியாளரால் குறிப்பு வழங்கப்பட்டுள்ளது. பூமியில் சரியாக அளவீடுகள் உள்ளது எனவும் நகரசார் ஆய்வாளர் II-ம் பிரிவு அவர்களால் குறிப்பு வழங்கப்பட்டுள்ளது மேலும், அகல சாலை அமைப்பு, பொது ஒதுக்கீடு மூலை முடுக்கு மனை வரைபடத்தில் உள்ளவாறு இம்மாநகராட்சிக்கு தானபப்த்திரம் வழங்கப்பட்டுள்ளது. (அசல் தானப்பத்திரம் எண். I புத்தகம் 2023ம் வருடத்திய 3132-ம் ஆவணம் ( 26 தாள்களை கொண்டது), நாள். 22.08.2023, பிழைதிருத்தல் ஆவணம் அசல் தானப்பத்திரம் எண். I புத்தகம் 2023ம் வருடத்திய 3643-ம் ஆவணம் ( 33 தாள்களை கொண்டது), நாள். 25.09.2023 ) மேற்படி, மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் இசைவினை வழங்கவும், மனைபிரிவினை அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u><br>1. தானப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதனை ஏற்கலாம்.<br>2. இறுதி ஒப்புதல் இசைவினை வழங்கலாம்.<br>3. மேற்படி மனை பிரிவினை மாமன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண். 6947/2023 /MCF1) | அலுவலக குறிப்பை அங்கீகரிக்க தீர்மானிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| 29.11.2023 | 442. தஞ்சாவூர் மாநகராட்சி பொது சுகாதார பிரிவில் பணிபுரியும் அனைத்து கோட்ட 168 ஆண் துய்மை பணியாளர்களுக்கு அரசாணை (நிலை) எண்.168 ந.நி.மற்றும் கு.வ.(பேரூ-1) துறை நாள் 16.11.2015ன்படி (அரைக்கை சட்டை மற்றும் முழுக்கால் சட்டை (Full Pant) மற்றும் தலைப்பாகை துணை நீலக்கலர்-1 செட்) மற்றும் 122 பெண் துய்மை பணியாளர்களுக்கு (பாலிஸ்டர் புடவை மற்றும் ரவிக்கை துணி, தலைப்பாகை துணி நீலக்கலர்-1 செட்) ஆக கூடுதல் 290 துய்மை பணியாளர்களுக்கு 2023-2024ம் ஆண்டிற்கு சீருடைகள் வாங்கி வழங்கிடவும் அதற்கான தையல் கூலி உட்பட ஆகும் உத்தேச செலவினம் ரூ.10,00,000/-க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u><br>1) மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் முன் அனுமதி பெற்று கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு சப்ளை உத்திரவு வழங்கிட இவ்வலுவலக நடவடிக்கையை மாமன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.13620/2023/எச்4) | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது |
| 29.11.2023 | 443. தஞ்சாவூர் மாநகராட்சி பொது சுகாதார பிரி₹வு யானைக்கால் நோய் தடுப்பு திட்ட பிரிவு – தஞ்சாவூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்-1 முதல் 51 வரையிலான பகுதிகளில் ஏற்படும் டெங்கு காய்ச்சல் மற்றும் வைரஸ் காய்ச்சல் நோய்களை கட்டுப்படுத்த முதிர்க்கொசுக்களை அழிக்க கொசு தடுப்பு புகை மருந்து அடித்திட அதற்கு தேவையான இயந்திரங்கள் கீழ்கண்டவாறு அவசர அவசியம் கருதி உடன் வாங்கி வழங்க அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.3,50,000/-க்கு (GST உட்பட) மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது,<br>1. HAND FOGGING (MINI FOGGING) MACHINE –15 NOS<br><u>அலுவலக குறிப்பு</u><br>1) மாமன்றம் அனுமதிக்கலாம்<br>2) மேற்கண்டுள்ள செலவினம் 2023-24 திருத்தப்பட்ட பொது நிதியில் செலவு மேற்கொள்ள அனுமதிக்கலாம்.<br>(**ந.க.எண்.** 12754/2019/எச்.8) | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது |

<table>
<tr>
<td>29.11.2023</td>
<td>

444. தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 51 வார்டுகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணி நடவடிக்கையாக வீடுகள்தோறும் கொசுப்புழு அழிக்கும் பணிக்கு தினக்கூலி பணி அடிப்படையில் 210 களப்பணியாளர்களைக்கொண்டு ஒப்பந்த அடிப்படையில் 91-நாட்களுக்கு 03.10.2023 முதல் 02.01.2024 வரை பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரிடவும், மேற்படி பணிக்கு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்களது செயல்முறை உத்தரவு ந.க.எண்.34535/2023/ஜி2, நாள்.03.08.2023ம் தேதியின்படி தெரிவிக்கப்பட்ட விலைப்புள்ளி விலை நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.590/- (EPF 13.61% + ரூ.80.29 + ESI 3.25% ரூ.19.17 + நிர்வாக செலவினம் 10% ரூ.59/- ) ஆக கூடுதல் நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.748/- விலை விகிதத்துடன் ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,45,00,000/-க்கு (ரூபாய் நூற்றி நாற்பத்தைந்து இலட்சம் மட்டும்) 27.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.

<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ.</th><th>சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>2</td><td>3</td><td>4</td></tr>
<tr><td>1.</td><td>திரு.R.திலீப்குமார், தஞ்சாவூர்</td><td>14294280.00</td><td>மதிப்பீட்டு தொகையை விட (-) 0.06% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு.S.கோபி, தஞ்சாவூர்</td><td>14523600.00</td><td>மதிப்பீட்டு தொகையை விட (+) 1.52% அதிகம்</td></tr>
</table>

<u>அலுவலக குறிப்பு</u>

1. மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியில் வரிசை எண்.1ல் கண்டுள்ள (-) 0.06% குறைவாக ரூ.14294280.00/- என்ற விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.R.திலீப்குமார், தஞ்சாவூர் என்ற ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணிக்கு வேலை உத்தரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.8933/2021/எச்8)

</td>
<td>அலுவலக குறிப்பை ஏற்க தீர்மானிக்கப்படுகிறது</td>
</tr>
</table>

**29.11.2023**

445. தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் போக்குவரத்திற்கும் பொது மக்களுக்கும் இடையூறாக சுற்றிதிரியும் மாடுகளை பிடித்து மாடுகளின் உரிமைதாரருக்கு அபராதம் விதிக்கும் நடவடிக்கையாக தமிழ்நாடு பொது சுகாதார சட்டம் 1939ஆம் ஆண்டின்படி அத்தியாயம் VI –ல் சட்டப்பிரிவு 41(3), 42, 43, 44, 45, மற்றும் அத்தியாயம் VII-ல் பிரிவு 61ன் படி மாடுகளை பிடித்திட இம்மாநகராட்சி மாமன்ற பொருள் 799/நாள் 27.01.2023ல் அனுமதிக்கப்பட்ட அபராத தொகையை தற்போதைய சூழலில் கூடுதல் செலவினங்கள் ஏற்படும் என்பதால் கீழ்க்கண்டவாறு திருத்தி மாடுகளின் உரிமைதாரர்களுக்கு அபராதம் விதித்து வசூலித்திடவும் மற்றும் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **ஏற்னெவே மாமன்ற பொருள் 799/நாள் 27.01.2023ல் தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்ட அபராத தொகை** | **தற்போது திருத்தி அமைக்கப்பட்ட அபராத தொகை** |
|---|---|
| முதல் முறை அபராதம்<br>மாடு ஒன்றுக்கு -- ரூ. 3000/-<br>கன்று ஒன்றுக்கு -- ரூ. 1500/- | முதல் முறை அபராதம்<br>மாடு ஒன்றுக்கு -- ரூ. 5000/-<br>கன்று ஒன்றுக்கு -- ரூ. 3000/- |
| இரண்டாவது முறை அபராதம்<br>மாடு ஒன்றுக்கு -- ரூ. 4000/-<br>கன்று ஒன்றுக்கு -- ரூ. 2000/- | இரண்டாவது முறை அபராதம்<br>மாடு ஒன்றுக்கு -- ரூ. 10000/-<br>கன்று ஒன்றுக்கு -- ரூ. 5000/- |
| மூன்றாவது முறை அபராதம்<br>மாடு ஒன்றுக்கு -- ரூ. 5000/-<br>கன்று ஒன்றுக்கு -- ரூ. 2500/- | மூன்றாவது முறை அபராதம்<br>மாடு ஒன்றுக்கு -- ரூ. 15000/-<br>கன்று ஒன்றுக்கு -- ரூ. 10000/-<br>மேலும் ஒவ்வொரு நாளைக்கும் ரூ.10,000/- அபராதம் விதிக்கப்படும். |
| | நான்காவது முறை பிடிக்கப்பட்டால் கோ சாலைக்கு அனுப்பப்படும். |

<u>அலுவலக குறிப்பு</u>

1. பொது மக்களுக்கும் போக்குவரத்திற்கும் பெரும் இடையூறாக உள்ளதால், மாடுகள் வளர்ப்போர் மாடுகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக உள்ளதனை கருத்தில் கொண்டு அனுமதி அளிக்கலாம்.

அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது

| | | |
|---|---|---|
| | 2. அபராத தொகையுடன் மாடுகளை பிடித்து அடைக்கும் இடத்தில் அவற்றை பராமரிக்க ஆகும் செலவினங்கள் உட்பட நிர்ணயிக்கப்படும் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.<br>3. தமிழ்நாடு பொது சுகாதார சட்டம் 1939ஆம் ஆண்டின்படி இடையூறு தரும் விலங்குகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக அனுமதிக்கப்பட்டுள்ளதால் அனுமதி அளிக்கலாம்.<br>4. அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்ட இவ்வலுவலக நடவடிக்கையை மாமன்றம் ஏற்கலாம். (**ந.க.எண்**. 13114/2021/**எச்**8) | |
| **29.11.2023** | 446. திரு எஸ்.செந்தமிழ்செல்வன், 1வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்.<br>1வது வார்டில் உள்ள வெண்ணாற்றங்கரை பகுதியில் புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிட தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திரு எஸ்.செந்தமிழ் செல்வன்<br>வழி மொழிந்தவர் :<br>திரு க.அய்யப்பன்<br>நிறைவேறியது |
| **29.11.2023** | 447. திரு க.அய்யப்பன், 2வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்.<br>2வது வட்டத்திற்குட்பட்ட வேலூர் சருக்கை பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் சிறுவர் பூங்கா அமைத்திட தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திரு க.அய்யப்பன்<br>வழி மொழிந்தவர் :<br>திரு எஸ்.செந்தமிழ் செல்வன்<br>நிறைவேறியது |
| **29.11.2023** | 448. திருமதி து.சுகந்தி, 3வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்.<br>3வது வார்டுக்குட்பட்ட அப்சர் நகர் (அன்பழகன் நகர் விரிவாக்கம்) பகுதியில் குடிநீர் பிரதான குழாய் அமைத்து தெரு விளக்கு வசதி செய்திடவும் மற்றும் ராமையா நகர் விரிவாக்கம் சிவப்பிரகாசம் நகரில் பாதாள சாக்கடை இணைப்பு, குடிநீர் பிரதான குழாய் அமைத்திடவும் தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திருமதி து.சுகந்தி<br>வழி மொழிந்தவர் :<br>திருமதி இ.சுமதி<br>நிறைவேறியது |

| | | |
|---|---|---|
| 29.11.2023 | 449. திருமதி இ.சுமதி, 4வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்.<br>4வது வார்டுக்குட்பட்ட கரந்தை கீரைக்காரத்தெருவில் பழுதடைந்துள்ள குடிநீர் பகிர்மான குழாய்களை மாற்றி புதிதாக அமைத்திடவும், புதிதாக தார் சாலை அமைத்திடவும் தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திருமதி இ.சுமதி<br>வழி மொழிந்தவர் :<br>திருமதி து.சுகந்தி<br>நிறைவேறியது |
| 29.11.2023 | 450. திருமதி ஜெ.சுகாசினி, 13வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்.<br>13வது வார்டுக்குட்பட்ட வடவாறு கரைமேடு சாலையில் புதிதாக மின் கம்பங்கள் அமைத்து மின் விளக்குகள் பொருத்தி தெரு விளக்கு வசதி செய்திடவும் மற்றும் இச்சாலைக்கு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் கருணாநிதி சாலை என பெயர் வைத்திடவும் தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திருமதி ஜெ.சுகாசினி<br>வழி மொழிந்தவர் :<br>திருமதி சொ.பாப்பா<br>நிறைவேறியது |
| 29.11.2023 | 451. திரு டி.சந்தானகிருஷ்ணன், 24வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்.<br>24வது வார்டுக்குட்பட்ட அரண்மனை வளாகத்தில் சிறுவர் பூங்கா மற்றும் இரண்டு உயர்மின் கோபுர விளக்கு அமைத்திடவும் தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திரு<br>டி.சந்தானகிருஷ்ணன்<br>வழி மொழிந்தவர் :<br>திரு எம்.தமிழ்வாணன்<br>நிறைவேறியது |
| 29.11.2023 | 452. திரு ஆர்.தெட்சிணாமூர்த்தி, 25வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்.<br>25வது வார்டுக்குட்பட்ட வரகப்பையர் சந்து, கிருஷ்ணப்பிள்ளை சந்து, நாகமர சந்து, தத்தோஜியப்பா சந்து மற்றும் விடுபட்ட தெருக்களுக்கு பாதாள சாக்கடை இணைப்பு வழங்கிட தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திரு<br>ஆர்.தெட்சிணாமூர்த்தி<br>வழி மொழிந்தவர் :<br>திரு ஜே.வி.கோபால்<br>நிறைவேறியது |

| | | |
|---|---|---|
| 29.11.2023 | 453. திருமதி அ.கெஜலெட்சுமி,26வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்.<br>26வது வார்டு கந்தபொடிக்காரத்தெருவின் ஆரம்பத்தில் கழிவு நீர் ஓடை கட்டிடவும், அத்தர் ஜமாத் பள்ளிவாசல் அருகில் கொள்ளுப்பேட்டை தெரு முதல் ஆட்டுமந்தை வைக்கோல் காரத்தெரு வரை உள்ள மழைநீர் வடிகாலை கட்டிடவும், சின்ன குரும்ப தெரு, சக்காப் சாகிப் தைக்கால் தெருக்களில் பாதாள சாக்கடை இணைப்பு வழங்கிடவும், சாந்தா உசேன் சாகிப் தைக்கால் தெரு, கொள்ளுப்பேட்டைத் தெருவில் உள்ள சிறு சிறு சந்துகளில் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்திடவும் மற்றும் தெற்கு சையது அலி பாட்சா தெருவில் மழைநீர் வடிகால் கட்டிடவும் தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திருமதி<br>அ.கெஜலெட்சுமி<br>வழி மொழிந்தவர் :<br>திருமதி கே.அமுதா<br>நிறைவேறியது |
| 29.11.2023 | 454. திரு சு.செந்தில், 34து வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்.<br>34வது வார்டுக்குட்பட்ட இரண்டு இடங்களில் பழுதடைந்துள்ள குடிநீர் மோட்டார் அறைகளை இடித்துவிட்டு புதிதாக கட்டிடவும் மற்றும் வார்டில் உள்ள தனியார், அரசு பள்ளிகளின் சுற்றுச்சுவர்களில் நாட்டுப்புற கலைகள், வீர விளையாட்டுகள், புகழ் பெற்ற மன்னர்கள், கோவில்களின் ஓவிங்களை வரைந்திடவும் தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திரு சு.செந்தில்<br>வழி மொழிந்தவர் :<br>திரு தி.லெனின்<br>நிறைவேறியது |
| 29.11.2023 | 455. திருமதி ரா.தமிழரசி, 37வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்.<br>37வது வார்டு மாரிகுளம் மேல்கரையில் உள்ள மாரிகுளம் சுடுகாட்டின் சுற்றுச்சுவரை உயர்த்தி கட்டிட தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திருமதி ரா.தமிழரசி<br>வழி மொழிந்தவர் :<br>திருமதி ச.ரம்யா<br>நிறைவேறியது |
| 29.11.2023 | 456. திருமதி எம்.உஷா, 39வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்.<br>39வது வார்டு காத்துான் பீவி நகர் பிரதான சாலை மற்றும் பர்மா காலனி 14ம் தெரு பிரதான சாலைகளை புதிதாக அமைத்திட தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திருமதி எம்.உஷர<br>வழி மொழிந்தவர் :<br>திருமதி க.சுகந்தா<br>நிறைவேறியது |

| | | |
|---|---|---|
| 29.11.2023 | 457. திரு ஜி.கலையரசன், 46வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்.<br>46வது வார்டில் உள்ள பாண்டியன் நகரின் மையப்பகுதியில் உள்ள பொது இடத்தில் நடைபாதை மற்றும் விளக்கு வசதியுடன் ஒரு சிறுவர் பூங்கா அமைத்திட தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திரு ஜி.கலையரசன்<br>வழி மொழிந்தவர் :<br>திரு ஜெ.சரீப்<br>நிறைவேறியது |
| 29.11.2023 | 458. திரு ஜெ.சரீப், 47வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்.<br>47வது வார்டில் உள்ள பூக்கொல்லை குறுக்குத்தெரு, ஸ்ரீநகர் முதல் குறுக்குத்தெரு, சுப்பிரமணியபுரம் குறுக்குத்தெரு, கோபாலபுரம் குறுக்குத்தெரு ஆகிய தெருக்களின் சாலைகளில் பேவர் பிளாக் சாலைகள் அமைத்திடவும், குமார் போஸ்டல் காலனி விரிவாக்கம், சுப்பிரமணியபுரம் 1-ம் தெரு ஆகிய இடங்களில் விடுபட்ட வீடுகளுக்கு பாதாள சாக்கடை இணைப்பு வழங்கிடவும், விசாலாட்சி நகரில் பழுதடைந்துள்ள பூங்காவில் பராமரிப்பு பணிகள் செய்து சுற்றுச்சுவர் கட்டி உட்புறம் பேவர் பிளாக் கற்தளம் அமைத்திடவும், இந்த வார்டில் உள்ள 20 புதிய மின் கம்பங்களில் தெரு விளக்குகள் அமைத்திடவும் தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திரு ஜெ.சரீப்<br>வழி மொழிந்தவர் :<br>திரு க.கலையரசன்<br>நிறைவேறியது |
| 29.11.2023 | 459. திருமதி சர்மிளாதேவி ராஜா, 48வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்.<br>48வது வார்டுக்குட்பட்ட முத்தமிழ் நகர் பூங்காவிற்கு புதிதாக சுற்றுச்சுவர் கட்டி பராமரிப்பு பணிகள் செய்து சிறுவர்களுக்கான அனைத்து விளையாட்டு உபகரணங்கள் புதிதாக அமைத்திட தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திருமதி சர்மிளாதேவி ராஜா<br>வழி மொழிந்தவர் :<br>திருமதி பி.டெய்சிராணி<br>நிறைவேறியது |

| | | |
|---|---|---|
| **29.11.2023** | 460. திருமதி பி.டெய்சிராணி, 49வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்.<br>49வது வார்டுக்குட்பட்ட முனிசிபல் காலனி முதல் தென்றல் நகர் வரை உள்ள பிரதான சாலையின் இடதுபுறத்திலும், ஸ்டேட் பேங்க் காலனி சாலையின் இரு புறங்களிலும் பேவர் பிளாக் கற்தளம் அமைத்திடவும், முனிசிபல் காலனியில் தற்சமயம் இயங்கி வரும் மாநகராட்சி உயர்நிலைப்பள்ளியை மாணவ, மாணவிகளின் நலன் கருதி இதே வார்டில் முனிசிபல் காலனி 9ம் தெருவில் பள்ளிக்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் இடம் மாற்றி புதிதாக பள்ளிக்கட்டிடத்தை கட்டிட தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திருமதி<br>பி.டெய்சிராணி<br>வழி மொழிந்தவர் :<br>திருமதி க.மரகதம்<br>நிறைவேறியது |

நாள் : **04.12.2023** — ஒம்./ சண்.இராமநாதன்,
இடம்: தஞ்சாவூர். — மேயர்.

// உண்மை நகல் //

**மேயர்,**
தஞ்சாவூர் மாநகராட்சி.

பெறுநர்
1) மாவட்ட ஆட்சித்தலைவர், வளர்ச்சி பிரிவு, தஞ்சாவூர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–600 028 அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3) உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, உடன் தணிக்கை பிரிவு, தஞ்சாவூர் மாநகராட்சி.

நகல் உதவி திட்ட அமைப்பாளர், தஞ்சாவூர் மாநகராட்சி (மாநகராட்சி இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய)
„ சி5–மாமன்றக்கூட்ட எழுத்தர்.
„ அலுவலக விளம்பர பலகை.

**தஞ்சாவூர் மாநகராட்சி**

**மாமன்றக் கூட்ட தீர்மான நகல்**

<table>
<tr><th>Date of Meeting</th><th>Serial Number and subject in the Agenda<br>(URGENT MEETING)</th><th>Decision of the City Corporation</th></tr>
<tr><td>29.11.2023</td><td>461. தஞ்சாவூர் மாநகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்டுள்ள மாத உரிம இனங்கள் கடந்த 18.10.2023ல் நடைப்பெற்ற பொது ஏலத்தில் கீழ்க்கண்ட விபரப்படி கோரப்பட்ட உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியினை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>மாத உரிமம் பொது ஏலம் நாள்.18.10.2023</td><td>அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது</td></tr>
</table>

| வ. எண் | கடை எண் | ஏலதாரர் பெயர் (திருவாளர்கள்) | ஏலக் கேள்விகள் (ரூ.) | தற்போதைய உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| **சரபோஜி சந்தை கடைகள்** | | | | |
| 1 | 119 | விஜய் | 6000 | - |
| | | பிரையன் ஹக்கீன்ஸ் | 6500 | 6500 |
| 2 | 130 | ஹரிவர்ஷன் | 8500 | 8500 |
| | | குமரவேல் | 8000 | - |
| 3 | 132 | ராம்குமார் | 6000 | 6000 |
| | | கிருஷ்ணமூர்த்தி | 5500 | - |
| 4 | 139 | மாரீஸ்வரி | 7500 | 7500 |
| | | சவுண்டீஸ்வரன் | 6500 | - |
| | | மாலதி | 7000 | - |
| 5 | 140 | மாலதி | 8500 | - |
| | | முகமதுஅலி | 9000 | 9000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | 12,14,19,20,21,24,29,30,32,33,34,35,40,41,42, 43,49,50, 52, 55, 62, 63, 64, 67, 69, 92, 94, 103, 104,107,126,133,138, 152,153,158, 159, 160, 164, 177, 179, 180,183,184,185,186, 218,219,220,222, 223, 224, 226, 230, 231, 232, 239, 243, 246, 252, 253, 254,255,256, 261, 262, 263, 264, 265,266,274,275,276, 277, 278, 283,284,285, 287,290,291,292,293,294,299,302 | | | எவரும் ஏலம் கோரவில்லை |
| **திருவள்ளுவர் வணிக வளாகம்** | | | | |
| 7 | 3 | **வி.தனபால்** | 41000 | - |
| | | **ஜெ.சதீஷ்குமார்** | 30000 | - |
| | | **சந்தோஷ்** | 41500 | 41500 |
| 8 | 7 | **அபுபக்கர்** | 13500 | 13500 |
| | | **எஸ்.கண்ணன்** | 10500 | - |
| 9 | 9 | **சிராஜீதின்** | 16000 | 16000 |
| | | **தனபால்** | 15000 | - |
| | | **சதீஷ்குமார்** | 15500 | - |
| 10 | 10 | **தனபால்** | 13500 | 13500 |
| | | **அசோக்குமார்** | 13000 | - |
| 11 | 12 | **சாகுல் ஹமீது** | 16500 | 16500 |
| | | **ராஜேஸ்வரி** | 10000 | - |
| 12 | 14 | **இளஞ்செழியன்** | 12000 | 12000 |
| | | **எஸ்.வெங்கடேசன்** | 11500 | - |
| 13 | 15 | **எஸ்.கண்ணன்** | 13500 | 13500 |
| | | **ராஜேஸ்வரி** | 12000 | - |
| 14 | 16 | **முத்துக்குமார்** | 10000 | 10000 |
| | | **எஸ்.வெங்கடேசன்** | 9500 | - |
| 15 | 17 | **சிவமணி** | 8000 | - |
| | | **ரவிகுமார்** | 8500 | 8500 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 16 | 18 | வினோதினி | 8500 | - | | |
| | | | | ரவிகுமார் | 9000 | 9000 | | |
| | | 17 | 19 | ராஜலெட்சுமி | 12500 | 12500 | | |
| | | | | ரவிகுமார் | 12000 | - | | |
| | | 18 | 22 | குணசேகரன் | 13000 | - | | |
| | | | | சையதுசம்சுதீன் | 13500 | 13500 | | |
| | | 19 | 23 | அழகுபாண்டியன் | 9500 | 9500 | | |
| | | | | கிருஷ்ணமூர்த்தி | 9000 | - | | |
| | | 20 | 24 | அப்துல்அப்பாஸ் | 10000 | 10000 | | |
| | | | | மனோஜ்குமார் | 9500 | - | | |
| | | 21 | 25 | சங்கீதா | 9000 | 9000 | | |
| | | | | நெடுஞ்செழியன் | 8500 | - | | |
| | | 22 | 26 | சங்கீதா | 9000 | 9000 | | |
| | | | | நெடுஞ்செழியன் | 8500 | - | | |
| | | 23 | 27 | குணசேகரன் | 9000 | 9000 | | |
| | | | | கேசவன் | 8500 | - | | |
| | | 24 | 29 | கே.இளங்கோவன் | 10500 | - | | |
| | | | | விஜயலெட்சுமி | 11000 | 11000 | | |
| | | 25 | 31 | மாரியம்மாள் | 12000 | 12000 | | |
| | | | | கார்த்திக் | 11500 | - | | |
| | | 26 | 33 | மணிபாரதி | 11000 | 11000 | | |
| | | | | கேசவன் | 10500 | - | | |
| | | 27 | 36 | கார்த்திக் | 16000 | 16000 | | |
| | | | | காயத்திரி | 15500 | - | | |
| | | 28 | 39 | அழகுபாண்டியன் | 14000 | 14000 | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காயத்திரி | 13500 | - |
| 29 | 41 | தினகரன் | 10000 | 10000 |
| | | கார்த்திக் | 9500 | - |
| 30 | 42 | தினகரன் | 9000 | - |
| | | ரவிகுமார் | 9500 | 9500 |
| 31 | 44 | வினோத்குமார் | 15500 | 15500 |
| | | கே.தர்மராஜ் | 15000 | - |
| | | கோகுலகிருஷ்ணன் | 12500 | - |
| 32 | 47 | கோகுலகிருஷ்ணன் | 16000 | - |
| | | சிவமணி | 16500 | 16500 |
| 33 | 1,2,6,8,11,35 | | | எவரும் ஏலம் கோரவில்லை |
| ஆம்னி பேருந்து நிலையம் | | | | |
| 34 | 8 | சுரேஷ் | 11000 | - |
| | | சிவகுமார் | 11500 | 11500 |
| 35 | 10 | நவின்குமார் | 11500 | 11500 |
| | | செந்தில்குமார் | 11000 | - |
| 36 | 13 | கோவிந்தராஜ் | 12000 | - |
| | | சேகர் | 12500 | 12500 |
| 37 | 14 | ராமலிங்கம் | 12000 | - |
| | | தர்மராஜ் | 12500 | 12500 |
| 38 | 15 | சுந்தரபாண்டியன் | 12500 | 12500 |
| | | சிவாஅய்யாசாமி | 12000 | - |
| 39 | 16 | செல்வலெட்சுமி | 13500 | 13500 |
| | | கோவிந்தராஜ் | 12500 | - |
| 40 | 17 | முத்துக்குமார் | 12500 | 12500 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சிவக்குமார் | 11500 | - |
| 41 | 18 | கயல்விழி | 13000 | 13000 |
| | | முகமதுசாலிக் | 12500 | - |
| 42 | 21 | முகம்மதுசாலிக் | 12000 | - |
| | | விக்னேஷ் | 12500 | 12500 |
| 43 | 23 | அருண்பாண்டியன் | 13000 | 13000 |
| | | குமரேசன் | 12500 | - |
| 44 | 24 | சுசீலா | 12500 | 12500 |
| | | ரபீக்முகம்மது | 12000 | - |
| 45 | முதல் தளம் கடைகள். 1,2,3,4,5,6,7<br>ஆம்னி பேருந்து நிலையம் தங்கும் அறைகள் - 1,2,3,4,5 | | | எவரும் ஏலம் கோரவில்லை |
| **மீன் மார்க்கெட்** | | | | |
| 46 | மீன் மார்க்கெட் | ரபீக்முகம்மது | 1025000 | 1025000 |
| | | ராஜ்குமார் | 1015000 | - |
| | | வினோத்குமார் | 970000 | - |
| **அண்ணாசாலை கடைகள்** | | | | |
| 47 | 13 | வசந்த் | 7500 | 7500 |
| | | அமிர்தபாண்டியன் | 7000 | - |
| 48 | 14 | வசந்த் | 7500 | 7500 |
| | | ஜெயராஜீ | 7000 | - |
| 49 | 16 | விஜயக்குமார் | 8000 | 8000 |
| | | கார்த்திக் | 7500 | - |
| 50 | 17 | லெட்சுமிகாந்தம் | 8500 | 8500 |
| | | கார்த்திக் | 8000 | - |
| 51 | 1,2,3,4,5,6,7,8,9,10,11,12,15,18,19,20,21,22,23,24,25,26,27,28,29,30,31,32,33,34,35,36,37,3 | | | எவரும் ஏலம் கோரவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | 8,39,40,41,42, 43,44,45 | | | |
| **திருவையாறு வணிக வளாக கடைகள்** | | | | |
| 52 | 3 | கவியரசு | 14500 | 14500 |
| | | யோகமித்ரன் | 13500 | - |
| 53 | 14,22,23 | | | எவரும் ஏலம் கோரவில்லை |
| **புதிய பேருந்து நிலைய கடைகள்** | | | | |
| 54 | **சிபிளாக்** - 6,7,8,9,10,11,13,15,16,23<br>**டிபிளாக்** - 3,4,5,6,7,13,14,15,16,17,18,19, 20,24,25<br>உட்புறகடை - 8,11,12 மாடிக்கடை- 3 | | | எவரும் ஏலம் கோரவில்லை |
| **அய்யாசாமி வாண்டையார் பேருந்து நிலைய கடைகள்** | | | | |
| 55 | 3, 23 | | | எவரும் ஏலம் கோரவில்லை |
| **காமராஜ் மார்க்கெட் கடைகள்** | | | | |
| 56 | 39,81,85,124,160,182 | | | எவரும் ஏலம் கோரவில்லை |
| **சேர்வைகாரன் தெரு கட்டண கழிவறை (3வது அழைப்பு)** | | | | |
| 57 | சேர்வைகாரன் தெரு கட்டண கழிவறை | | | எவரும் ஏலம் கோரவில்லை |
| 58 | தஞ்சாவூர் மாநகராட்சிக்கு சொந்தமான அண்ணா சாலையில் (ஆனந்தம் சில்க்ஸ் எதிர்புறம்) யூனியன் கிளப் சுற்று சுவருக்கு கிழக்கிலிருந்து 29190 சதுரடி பரப்பளவில் உள்ள இடத்தில் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்தி கொள்ளும் உரிமம் (முற்றிலும் தற்காலிகமாக) | | | புதிய இனம் |
| 59 | பழைய பேருந்து நிலையம் (சுதர்சன சபா) அருகில் காலியாக உள்ள 42079 சதுரடி பரப்பளவில் உள்ள இடத்தில் இரண்டு சக்கர வாகனங்கள் நிறுத்தி கொள்ளும் உரிமம் | | | புதிய இனம் |
| 60 | திருவையாறு வணிக வளாக தரைதளத்தில் உள்ள இடத்தில் 38 கடைகள் தங்களது சொந்த செலவில் சுற்றுசுவர் அமைத்து பயன்படுத்தி கொள்ளும் உரிமம் | | | புதிய இனம் |

| | | |
|---|---|---|
| | <u>அலுவலகுறிப்பு:</u><br>1. வரிசை எண்.1 முதல் 5 முடிய, வரிசை எண்.7 முதல் 32 முடிய, வரிசை எண்.34 முதல் 44 முடிய, வரிசை எண்.46 முதல் 50 முடிய, வரிசை எண்.52 ஆகிய இனங்களுக்கு உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியினை மாமன்றம் ஊர்ஜிதம் செய்யலாம்<br>2. வரிசை எண்.6, வரிசை எண்.33, வரிசை எண்.45, வரிசை எண்.51, வரிசை எண்.53, வரிசை எண்.54 முதல் 57 முடிய உள்ள இனங்களில் சில இனங்களில் ஏலம் கோரவில்லை. சில இனங்களில் ஒருவர் மட்டுமே ஏலம் கோரியுள்ளதால், ஏலம் போகாத இனங்களையும் சேர்த்து மறுஏலம் கோர மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>3. வரிசை எண்.58, 59 மற்றும் 60 ஆகிய புதிதாக சேர்க்கப்பட்டுள்ள இனங்களுக்கு பொது ஏலம் கோர மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.10849/2022/எம்சிஏ5) | |
| 29.11.2023 | 462. தஞ்சாவூர் மாநகராட்சி மண்டலம்-1க்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 13 வரையிலான வார்டுகளில் உள்ள குடிநீர் பிரதான குழாய்களில் அவ்வப்போது பழுதுகள் ஏற்பட்டு குடிநீர் வெளியேறி வீணாகி வருகிறது. இதனால் போதிய குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலை ஏற்படுகிறது. எனவே பொது மக்கள் நலன் கருதியும் மற்றும் குடிநீர் பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டும் மேற்படி மண்டலம்-1க்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 13 வரையிலான வார்டுகளில் உள்ள குடிநீர் பிரதான குழாய்களில் ஏற்படும் பழுதுகளை சீர் செய்யும் பணிக்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.5,00,000/-க்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br><u>அலுவலக குறிப்பு:-</u><br>1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.5,00,000/-க்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2023-24ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.15314/2023/எம்சிஇ5) | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| 29.11.2023 | 463. தஞ்சாவூர் மாநகராட்சி மண்டலம்-2க்குட்பட்ட வார்டு எண்.14 முதல் 28 வரையிலான வார்டுகளில் உள்ள குடிநீர் பிரதான குழாய்களில் அவ்வப்போது பழுதுகள் ஏற்பட்டு குடிநீர் வெளியேறி வீணாகி வருகிறது. இதனால் போதிய குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலை ஏற்படுகிறது. எனவே பொது மக்கள் நலன் கருதியும் மற்றும் குடிநீர் பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டும் மேற்படி மண்டலம்-2க்குட்பட்ட வார்டு எண்.14 முதல் 28 வரையிலான வார்டுகளில் உள்ள குடிநீர் பிரதான குழாய்களில் ஏற்படும் பழுதுகளை சீர்செய்யும் பணிக்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.5,00,000/-க்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br>அலுவலக குறிப்பு:-<br>1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.5,00,000/-க்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2023-24ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.15312/2023/எம்சிஇ5) | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது |
| 29.11.2023 | 464. தஞ்சாவூர் மாநகராட்சி மண்டலம்-3க்குட்பட்ட வார்டு எண்.29 முதல் 41 வரையிலான வார்டுகளில் உள்ள குடிநீர் பிரதான குழாய்களில் அவ்வப்போது பழுதுகள் ஏற்பட்டு குடிநீர் வெளியேறி வீணாகி வருகிறது. இதனால் போதிய குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலை ஏற்படுகிறது. எனவே பொது மக்கள் நலன் கருதியும் மற்றும் குடிநீர் பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டும் மேற்படி மண்டலம்-3க்குட்பட்ட வார்டு எண்.29 முதல் 41 வரையிலான வார்டுகளில் உள்ள குடிநீர் பிரதான குழாய்களில் ஏற்படும் பழுதுகளை சீர்செய்யும் பணிக்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.5,00,000/-க்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு. | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| | அலுவலக குறிப்பு:-<br>1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.5,00,000/-க்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2023-24ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.15311/2023/எம்சிஇ5) | |
| 29.11.2023 | 465. தஞ்சாவூர் மாநகராட்சி மண்டலம்-4க்குட்பட்ட வார்டு எண்.42 முதல் 51வரையிலான வார்டுகளில் உள்ள குடிநீர் பிரதான குழாய்களில் அவ்வப்போது பழுதுகள் ஏற்பட்டு குடிநீர் வெளியேறி வீணாகி வருகிறது. இதனால் போதிய குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலை ஏற்படுகிறது. எனவே பொது மக்கள் நலன் கருதியும் மற்றும் குடிநீர் பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டும் மேற்படி மண்டலம்-4க்குட்பட்ட வார்டு எண்.42 முதல் 51 வரையிலான வார்டுகளில் உள்ள குடிநீர் பிரதான குழாய்களில் ஏற்படும் பழுதுகளை சீர்செய்யும் பணிக்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.5,00,000/-க்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br>அலுவலக குறிப்பு:-<br>1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.5,00,000/-க்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2023-24ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.15313/2023/எம்சிஇ5) | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| 29.11.2023 | 466. தஞ்சாவூர் மாநகராட்சியில் எதிர்வரும் வடகிழக்கு பருவகால மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 51 வரையிலான பகுதிகளில் உள்ள மழை நீர் வடிகால்களை தூர்வாரும் பணிக்கு 2 எண்ணிக்கை JCB மற்றும் 2 எண்ணிக்கை டிப்பர் டிராக்டர் வாகனங்களை தினசரி வாடகைக்கு தருதல் பணிக்கு ஒப்பந்தபுள்ளிகள் கோரி பணிகள் மேற்கொள்ள போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினாலும், மழைக்கால பேரிடர் முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் அவசர அவசியம் கருதியும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம் - 2022, பிரிவு 57(7)இன் படி விலைப்புள்ளிகள் கோரி பணிகள் மேற்கொள்வதற்கு பணியின் அவசர அவசியம் கருதி 20.11.2023ம் தேதியன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படியான மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br><br>வ.எண் \| விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனம் / பெயர் \| விலைப்புள்ளி தொகை ரூ.<br>1. \| திரு.ஜி.செந்தில்குமார், தஞ்சாவூர் \| 991454.88<br>2. \| திரு.எம்.தியாகராஜன், தஞ்சாவூர் \| 1009862.88<br>3. \| திரு.எம்.கார்த்திகேயன், தஞ்சாவூர் \| 1028270.88<br><br>இவற்றில் திரு.ஜி.செந்தில்குமார், தஞ்சாவூர் என்ற ஒப்பந்ததாரரால் அளிக்கப்பட்ட குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று இப்பணியினை மேற்கொள்ள அனுமதித்ததையும், இதற்கான உத்தேச மதிப்பீட்டு செலவினத்தொகை ரூ.10,00,000/-க்கும், (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம் - 2022, பிரிவு 57(7)இன் கீழ் பணி மேற்கொண்டதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br><br><u>அலுவலக குறிப்பு:</u><br>இப்பணிக்கான உத்தேச செலவினத்தொகை ரூ.10,00,000/-க்கும் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்), குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு.ஜி.செந்தில்குமார், தஞ்சாவூர் என்ற ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கியதற்கும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம் - 2022, பிரிவு 57(7)இன் கீழ் பணி மேற்கொண்டதற்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண். 13931 / 2023 / எம்சிஇ4) | ஒப்புதல் வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது |

<table>
<tr>
<td>29.11.2023</td>
<td>

467. தஞ்சாவூர் மாநகராட்சியின் அன்றாட நிகவுகள், அரசு மற்றும் தனியார் நிகழ்வுகள், ஆய்வுக்கூட்டங்கள் மற்றும் நேரடி தள ஆய்வுகள் அனைத்து வகையான தகவல்களையும் ஆவணப்படுத்தும் விதமாக இணையதளம் மற்றும் சமூக வளைதளங்களில் பதிவேற்றம் செய்திடுதல், Digital Governance and Grievance Support போன்ற பணிகளை ஓர் ஆண்டிற்கு மேற்கொள்ளுவதற்காக 07.11.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | நிறுவனம் / ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | சதவீதம் |
|---|---|---|---|
| 1. | M/S. Avow Technologies, Chennai - 603103 | 1560000.00 | மதிப்பீட்டு தொகையை விட மிகமிக குறைவு |
| 2. | திரு.எஸ்.ரவிச்சந்திரன், தஞ்சாவூர். | 2376000.00 | மதிப்பீட்டு தொகையை விட குறைவு |

<u>அலுவலக குறிப்பு</u>

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியில் வரிசை எண்.1ல் கண்டுள்ள மிகமிக குறைவாக ரூ. 1560000/- என்ற விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S. Avow Technologies, Chennai-603103 என்ற நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று ரூ.18.41/- இலட்சம் மதிப்பில் (Including GST 18%) ஓர் ஆண்டு காலத்திற்கு பணி மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கப்படுவதற்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண்.11843/2022/எம்சிஇ4)

</td>
<td>ஒப்புதல் வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 29.11.2023 | 468. <u>மாண்புமிகு மேயர் அவர்களால் கொண்டு வரப்படும் நன்றி அறிவிப்பு தீர்மானம்</u><br>மக்களிடம் செல், அவர்களுடன் வாழ், அவர்களிடம் இருந்து கற்றுக்கொள், அவர்களை நேசி, அவர்களுக்கு சேவை செய் என்று சொன்ன பேரறிஞர் அண்ணா அவர்களின் கனவை நனவாக்கிட, தமிழ்நாட்டு மக்களின் நலன் கருதி அரசால் அறிவிக்கப்பட்ட நலத்திட்டங்கள் அனைத்தும் மக்களை சென்று அடைகின்றதா என்பதை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களே நேரடியாக களத்திற்கு சென்று ஆய்வு செய்து உரிய அறிவுரைகளை வழங்குவதற்காக, மாவட்ட ஆட்சி தலைவர்கள் இனி ஒவ்வொரு மாதமும் ஒரு நாள் வட்ட அளவில் தங்கி கள ஆய்வில் ஈடுபட்டு பொது மக்களுக்கு சேவை ஆற்றிட "உங்களை தேடி உங்கள் ஊரில்" என்ற உன்னத திட்டத்தை கொண்டு வந்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களுக்கும், தஞ்சை மாநகர மக்களின் சார்பாகவும், மாண்புகள் நிறைந்த இம்மாமன்றத்தின் சார்பாகவும் நன்றியை தெவித்துக் கொள்ளப்படுகிறது. | ஏகமனதாக நிறைவேறியது |

நாள் : 04.12.2023
இடம்: தஞ்சாவூர்.

ஒம்./ சண்.இராமநாதன்,
மேயர்.

// உண்மை நகல் //

**மேயர்,**
தஞ்சாவூர் மாநகராட்சி.

பெறுநர்

1) மாவட்ட ஆட்சித்தலைவர், வளர்ச்சி பிரிவு, தஞ்சாவூர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–600 028 அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3) உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, உடன் தணிக்கை பிரிவு, தஞ்சாவூர் மாநகராட்சி.

நகல் உதவி திட்ட அமைப்பாளர், தஞ்சாவூர் மாநகராட்சி (மாநகராட்சி இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய)
„ சி5–மாமன்றக்கூட்ட எழுத்தர்.
„ அலுவலக விளம்பர பலகை.